நாராயணன்

பேராசிரியர் :

மயிலை. சிவ முத்து

மாணவர் மன்றம்,

17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.

[விலை ரூபா ஒன்று

முதற் பதிப்பு மார்ச்சு, 1959

Jyothi Printers, Madras-1

பதிப்புரை

கதை எழுதுவது ஒரு தனிக்கலை. அதுவும் குழந்தைகளுக்காகக் கதை எழுதுவது மிகவும் அரியகலை. குழந்தையுள்ளம் மட்டும் பெற்றிருந்தால் போதாது. கதை எழுதுவதற்குத் தகுந்த கற்பனைவளமும் நிறைந்திருக்க வேண்டும். நம் மாணவர் மன்றத் தலைவர் பேராசிரியர் **மயிலை சிவமுத்து** அவர்களிடம் இந்தத் திறமை இயல்பாகவே அமைந்திருக்கிறது.

சிறு குழந்தைகட்கு நல்லறிவூட்டி அவர்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தும் புத்தம் புதிய கதைகளை முதன் முதலாக எழுதத் தொடங்கியவர் நம் பேராசிரியர் அவர்களேயாவர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்டுப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளாலும் பெரியவர்களாலும் விரும்பிப் படிக்கப்பட்ட இக்கதையை மாணவர் மன்ற வெளியீடாகக் குழந்தைகட்கு அளிக்கும் வாய்ப்புப் பெற்றமை குறித்துப் பெரு மகிழ்வு எய்துகின்றோம்.

குழந்தைகள் போகிற போக்கிலேயே விட்டு அவர்களை நல்வழியில் திருப்பும் நுட்பத்தை உணர்ந்தவர் இந்நூலின் ஆசிரியர். 'திருடாதே; பொய் சொல்லாதே' என்று ஆயிரம் தடவை படித்துப் படித்துச் சொல்வதைவிட அந்த நீதியை உணர்த்தக் கூடிய அழகான — உருக்கமான — கதையைக் குழந்தைகளுக்குச் சொல்லிவைத்தால் போதும். குழந்தைகள் தமது வாழ்நாள் முழுவதும் அதை மறவாமல் நல்ல வழியிலேயே நடப்பார்கள். இந்த நீதியை விளக்கும் ஒரு சிறந்த கதைதான் **நாராயணன்**. குற்றத்தை உணர்தல், மன்னிப்பின் மாண்பு முதலியவற்றையும் இக்கதை சித்திரிக்கிறது.

நாராயணன் கதையைப் படிக்கும்போது கதையைப் படிக்கிறோம் என்ற எண்ணமே உண்டாகாது. கதையில் வரும் நிகழ்ச்சிகள் எல்லாம் அப்படி அப்படியே குழந்தைகளின் மனக்கண்ணில் தோன்றுவதைப் பார்க்கலாம். இந்தக் கதையைப் படிக்கும் எந்தக் குழந்தையும் ஒரே மூச்சில் இதைப் படித்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கும். கதைப் போக்கின் விறுவிறுப்பு — எளிய நடை — இனிய உரையாடல் — உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் இதில் பின்னிக் கிடக்கின்றன. இந்தக் கதையைக் குழந்தைகள் மட்டும் அன்றிப் பெரியவர்களும் படிக்கலாம்.

முன்னரே மன்றத்தின் மூலமாக 'நல்ல குழந்தை', 'நல்ல எறும்பு' என்னும் கதைப் புத்தகங்களை வெளியிட இசைவு வழங்கிய பேராசிரியர் அவர்கள் **நாராயணன்** என்னும் இந்த அருமையான கதைப் புத்தகத்தையும் வெளியிட இசைவு தந்தமைக்கு என்றென்றும் நன்றி பாராட்டுகின்றோம். தமிழ்நாட்டுக் குழந்தைகள் இந்தக் கதைப் புத்தகத்தைப் படித்துப் பயனடைவார்களாக.

அன்பன்,

தணிகை உலகநாதன்.

மாணவர் மன்றம்,
17, இரத்தின முதலி தெரு,
சென்னை-1.

நாராயணன்

மங்கலம் என்பது ஒரு சிற்றூர். அந்த ஊரிலே ஒரு சிறு பள்ளிக்கூடமும் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்துக்கு எதிரிலே ஒரு பெரிய மாமரம் இருந்தது. அந்த மாமரத்தின் கீழே சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அந்தப் பாடசாலையிலே படிப்பவர்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால், அந்தப் பாடசாலை மூடப்பட்டு இருந்தது.

சிறுவர்கள் விளையாடும்போது மாலை மணி ஐந்து இருக்கும். அவர்கள் அங்கே சிறிது நேரம் ஏதோ விளையாடினார்கள். அவர்களுள் ஒருவன் அவன் விளையாட்டில் அலுத்துப் போனான். ஆதலால், அவன் வேறு யாதொன்றும்

விளையாட விரும்பினான். அவன் பெயர் மாணிக்கம்.

மாணிக்கம் தன் நண்பர்களை நோக்கி, "அடே கந்தா, முருகா, எல்லோரும் வாருங்கள். அதோ தெரிகின்றதே, ஒரு மாம்பழம்! அந்தப் பழத்தைக் குறிவைத்து நாம் ஒவ்வொருவராக ஒவ்வொரு கல் எறிவோம். எவன் எறிகிற கல் அப்பழத்தின் மீது படுகிறதோ, அவன் தான் நமக்குள் மிகவும் கெட்டிக்காரன்," என்றான்.

இதைக் கேட்ட எல்லாச் சிறுவர்களும், "ஆம், ஆம்; அவ்விதமே செய்யலாம்," என்று சொல்லிக் குதித்தார்கள். ஆனால், நாராயணன் என்னும் சிறுவன் மட்டும் அதற்குச் சிறிதும் சம்மதிக்கவில்லை.

ஆதலால், அவன் மாணிக்கத்தைப் பார்த்து, "நண்பா, நீ சொல்லுவது சரிதான். ஆனால், அந்தப் பழம் கீழே விழுந்தால் என்ன செய்வது? பள்ளிக்கூடத்து மாம்பழத்தை நாம் பறிக்கலாமா?" என்றான்.

அதற்கு மாணிக்கம், "அடே, இந்த நாராயணனைப்போல் பயங்கொள்ளி எவனும் இருக்கமாட்டான். நாம் எறிந்து அந்த மாம்பழம் விழுந்து விடுமா ?" என்ருன்.

உடனே கந்தன் என்னும் சிறுவன், "அடே, அப்படி விழுந்தாலும் நாம் அதை நம் ஆசிரியரிடம் கொண்டு போய்க் கொடுத்துவிடக் கூடாதா? அப்படிச் செய்தால் அவர் நம்மை அடித்து விடுவாரோ ! நாம் நல்ல பிள்ளைகள் என்று நம்மீது மிகவும் அன்பாக இருப்பார்—அல்லவா ?" என்ருன்.

அப்போது கோவிந்தன் என்பவன், "அவ்வளவுதாஞ! பிறகு அந்தப் பழத்தை அவர் நமக்கே கொடுத்து விடவும் நினைப்பார். அப்படிக் கொடுத்து விட்டால் நாம் அதைப் பங்கு போட்டுக் கொண்டு மகிழ்வோடு தின்னலாம்—அல்லவா ?" என்ருன்.

அப்படி அவன் சொன்னபோதே நாக்கில் நீர் ஊறிய கோபாலன் என்னும் சிறுவன், "அடே, இந்த ஒரு மாம்

பழத்துக்கா இவ்வளவு பாடு! நாம் இத்தனைப்பேர் இங்கே இருக்கின்றோம். ஒரு நொடிப் பொழுதில் இருக்கும் இடம் தெரியாமற் போய்விடாதா! நல்லது; பொழுது போகிறது,'' என்று சொல்லி ஒரு கல் எடுத்து ஓங்கி எறிந்தான்; அது பழத்தின்மீது படவில்லை. பிறகு முருகன் எறிந்தான்; அதுவும் படவில்லை; மாணிக்கம் எறிந்த கல்லும் தவறி விட்டது.

பிறகு அங்குள்ள ஒவ்வொரு சிறுவனும் கல் எறிந்தான். ஒன்றேனும் அப்பழத்தின்மீது படவில்லை. முடிவில் நாராயணன் முறை வந்தது. அப்போது நாராயணன், "நீங்கள் இவ்விதம் செய்வது சரி அன்று. நீங்கள் என்னை மிகவும் வற்புறுத்துவதால் நானும் கல் எறிகின்றேன். ஆனால், மாம்பழம் கீழே விழுந்தால் அதை நீங்கள் என்னிடம் கொடுத்துவிட வேண்டும். அதை நான் ஆசிரியரிடம் கொடுத்து விடுவேன். இது உங்களுக்குச் சம்மதந்தானா?'' என்றான்.

பிள்ளைகள் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்தனர். பிறகு மாணிக்கம்

சிறிது யோசித்து. "அடே நாராயணா, பழம் கீழே விழுந்தால் அதை உன்னி டம் கொடுத்துவிட வேண்டும்—அவ்வ ளவுதானே ?" என்றான்.

"ஆம்; அதை நான் நம் ஆசிரிய ரிடம் கொடுத்து விடுவேன்," என்றான் நாராயணன்.

"நீ எப்படியாவது செய்துகொள். அப் பழத்தை நானே எடுத்து உன் கையில் தருகிறேன். இதற்கு நீ ஒப்புக் கொள்ளுகின்றாயா ?" என்றான் மாணிக்கம்.

பிறகு நாராயணன், தன் கோபத்தை அடக்கிக் கொண்டு "நண்பா, இது உனக்கு நியாயமாக இருக்கின்றதா? நன்ருக எண்ணிப்பார்? பள்ளிக்கூடத்து மரத்திலிருந்து ஆசிரியர் உத்தரவின்றி நாம் பழம் பறித்துத் தின்னலாமா? இது திருட்டுத்தனம் அல்லவா?" என்ருன்.

அதற்கு மாணிக்கம், "அடே பயித்தியமே, போதும் உன் பேச்சை நிறுத்து. யாரையடா திருடன் என்று சொல்லுகின்ருய்? மகா யோக்கியன் போல் பேசுகின்ருயே! பழத்தைக் கல்லால் அடித்து விழச் செய்தவன் நீ அல்லவா! ஆகையாய், நீயே முதல் திருடன்," என்ருன்.

இதைக் கேட்டதும் மற்றப் பிள்ளைகள், "ஆம்; அகப்பட்டான் திருடன்—திருடன்." என்று சொல்லிக் கை கொட்டி நகைத்தார்கள்.

அப்போது நாராயணன், "ஐயோ! பாவிகளே என்மீதா பழி போட்டு விட்டீர்கள்! நீங்கள் அல்லவா முதலில் கல்லால் அடித்தீர்கள்! பிறகு உங்கள்

தொந்தரவினால் அல்லவா நான் அடிக்) தேன்," என்று மிகவும் இரக்கத்தோடு கூறினான்.

அப்போது ஒரு சிறுவன் நாராயணனை நோக்கி, "நாங்கள் எல்லோரும் விளையாட்டுக்குக் கல்லால் அடித்தோம். உன்னைப்போல் மரத்தில் உள்ள பழம் விழும்படியாகவா அடித்தோம்," என்றான்.

உடனே மற்றொரு சிறுவன், "அது கிடக்கட்டும், இந்த நாராயணன் நம்முடைய தொந்தரவால் கல்லால் அடித்ததாகக் கூறுகின்றானே — இவ்வளவு பேசுகின்ற இவனுக்கு அறிவு எங்கே போயிற்று," என்றான்.

நாராயணன், அப்போது மிக்கவருத்தத்தோடு, "ஆம்; உங்கள் சொல்லை நம்பியது என் மேல் தவறுதான். நாளைக்கு நம் ஆசிரியரேனும் என்மீது பிழையில்லை என்பதைத் தெரிந்து கொள்ளமாட்டாரா," என்றான்.

உடனே ஒரு சிறுவன், "அடே மாணிக்கம், நாளைக்கு நாராயணன்

இவைகளை யெல்லாம் ஆசிரியரிடம் சொல்லப்போகின்ருனும்,'' என்ருன்.

அதற்குள் மாணிக்கம், "அடே நாராயணு, நீ இதை இவ்வளவோடு நிறுத்தி விட்டால் பிழைத்தாய். நாங்கள் உனக்கும் இந்தப் பழத்தில் ஒரு பங்கு தருவோம். அப்படியல்லாமல் இதை ஆசிரியரிடம் சொல்லுவதாய் இருந்தால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து உன்மீதே பழியைப் போட்டு விடுவோம்; எச்சரிக்கை,' என்ருன்.

அப்போது அருகே இருந்த சிறுவர்களில் சிலர், "ஆம்; அப்படியே செய்வோம்; அடே எச்சரிக்கை,'' என்ருர்கள்.

நாராயணன் சிறிதுநேரம் ஒன்றும் தோன்ருமல் விழித்தான்.

> 'தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
> தீயார்சொல் கேட்பதுவும் தீதே;—தீயார்
> குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோ(டு)
> இணங்கி இருப்பதுவும் தீது.

என்னும் பாட்டின் பொருள் அவனுக்கு அப்போதுதான் நன்ருக விளங்கிற்று. பிறகு, அவன் ஒன்றும் சொல்லாமல்

சரேல்' என்று அவ்விடத்தை விட்டு நீங்கினன்.

அப்போது ஒருவன் "அடே நாராயணு, போகாதே-போகாதே," என்ருன்.

மற்ருெருவன், "பதில் சொல்ல முடியாமல் ஓடுகின்ருன் நாராயணன்," என்ருன்.

உடனே மாணிக்கம், "அடே, அவன் போனல் போகிருன். அது ஒரு பயித்தியம். வாருங்கள் நாம் இன்னும் சில பழங்களைப் பறிக்கலாம். ஒரு முறைக்குப் பத்துமுறை எறிந்தால் ஏன் விழாது?" என்ருன்.

அவ்விதமே அவர்கள் நெடுநேரம் கல்லெறிந்து சில பழங்களையும், செங்காய்களையும் வீழ்த்திஞர்கள் பிறகு அவர்கள் அவைகளைப் பங்குபோட்டு மகிழ்வோடு தின்று வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.



3

மறுநாள் காலையில் ஆசிரியர் பள்ளிக் கூடத்திற்கு வந்தார்; மாம்பழக் கொட்டைகள் கீழே கிடப்பதைப் பார்த்து, "இது யார் செய்த வேலை!" என்று சிறிது நேரம் எண்ணிப் பார்த்தார். அப்போது அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. முடிவில் அவர், "இதைக் குறித்துப் பிள்ளைகளிடம்

வினவுதல் வேண்டும்," என்று தாமா னித்தார்.

மணி பத்து அடிக்கும் சமயம். அப்போது பிள்ளைகள் ஒவ்வொருவராகப் பாடசாலையை அடைந்தனர். மாணிக்கம், கோவிந்தன், கந்தன், முருகன் முதலிய பலரும் பாடசாலைக்கு வந்து விட்டனர். பிறகு நாராயணனும் வந்தான்.

நாராயணனைக் கண்டதும் கோவிந்தனுக்கும், முருகனுக்கும் அச்சம் உண்டாயிற்று. ஆதலால், அவர்கள் மாணிக்கத்தைப் பார்த்து, "அடே நாராயணன் வந்துவிட்டான். நேற்று நடந்ததை அவன் உபாத்தியாயரிடம் சொல்லி விட்டால் நாம் என்ன செய்வது?" என்றார்கள்.

அப்போது மாணிக்கம், "நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்; நான் இருக்கின்றேன்," என்றான்.

பிள்ளைகள் யாவரும் வகுப்பில் வந்து உட்கார்ந்தார்கள். அப்பொழுது ஆசிரியர், "குழந்தைகளே, நான் உ...

களை இப்போது ஒன்று கேட்கப்போகின்றேன். உண்மையை ஒளிக்காமல் சொல்லி விடுங்கள். நேற்று மாமரத்தின்மேல் கல்லெறிந்து மாம்பழம் வீழ்த்தினவன் யாவன்?" என்றார்.



அப்பொழுது பிள்ளைகள் யாவரும் பேசாமல் இருந்தனர். கந்தனும், முருகனும் ஒருவனை ஒருவன் பார்த்து விழித்தனர். உடனே நாராயணன் எழுந்து நின்று, "ஐயா, நான்தான் அவ்வாறு செய்தேன்," என்றான்.

ஆசிரியர்: அப்படியா! நீயா அவ்வாறு புரிந்தாய்!

நாராயணன்: (தலை குனிந்து கொண்டு) ஆம்.

ஆசிரியர்: என்ன ஆச்சரியம் இது! நான் உன்னை மிகவும் நல்லவன் என்று அல்லவோ நினைத்திருந்தேன்! இருக்கட்டும் — நீ ஏன் அவ்விதம் செய்தாய்?

நாராயணன்: நான் கல்லெறிந்தால் தவறாது பழத்தின்மேல் படுமா என்று முயன்று பார்த்தேன்.

ஆசிரியர்: நன்று - நன்று இது நல்ல முயற்சி. ஆசிரியர் உத்தரவில்லாமல் அவ்வாறு செய்யலாமா?

நாராயணன்: நான் செய்தது தப்பிதந்தான்; ஐயா, சிறிதும் எண்ணிப் பாராமல் நான் இந்தச் செயலைச் செய்து விட்டேன்.

ஆசிரியர் அப்போது சிறிது நேரம் ஏதோ எண்ணத்தில் ஆழ்ந்து இருந்தார். நாராயணன் மிகவும் நல்லவன் என்பது அவருக்குத் தெரியும். மிகவும் நல்ல பிள்ளைகள் கூடச் சில சமயங்களில் பிழை செய்து விடுகின்றார்கள் அல்லவா! நாராயணனும் அவ்விதம்

தன்னை மறந்து பிழை செய்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் தீர்மானித்தார். 'பிழை செய்தாலும் உண்மை பேசுகின்றானே,' என்று அவருக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால் அப்போது, அவருக்கு வேறு சில சந்தேகங்கள் தோன்றின. ஆதலால், அவர் நாராயணனை மேலும் சில கேள்விகள் கேட்கலானார்.

ஆசிரியர்: அது போகட்டும்; நாராயணா, பழம் விழுகின்றதா என்று நீ முயன்று பார்த்ததாகச் சொல்லுகின்றாய். அப்படி முயன்று பார்ப்பதற்கு ஒன்றை அடித்து வீழ்த்தினால் போதாதா?

நாராயணன்: ஐயா! நான் ஒரு மாம்பழத்தினையே அடித்து வீழ்த்தினேன்.

ஆசிரியர்: ஆனால் மற்றப் பழங்களை வீழ்த்தியது யார்?

நாராயணன்: ஐயா, உண்மையில் அது எனக்குத் தெரியாது.

ஆசிரியர்: நல்லது; நீ அடித்த அந்த ஒரு மாம்பழந்தான் எங்கே?

நாராயணன்: நான் அதை உங்களிடம் கொடுப்பதற்காகவே கையில் வைத்திருந்தேன். அப்பொழுது என் நண்பன் ஒருவன் அதை என்னிடமிருந்து அபகரித்துக் கொண்டு போய் விட்டான்.

ஆசிரியர்: என்ன ஆச்சரியம்! அவன் யார்? அவனை எனக்குக் காட்டுவாயா?

ஆசிரியர் இவ்விதம் கேட்கும்போது நாராயணன் உடனே மாணிக்கத்தைச் சுட்டிக் காட்டினான்.

அப்பொழுது மாணிக்கம் எழுந்து "ஐயா, எனக்கு ஒன்றும் தெரியாது. நாராயணன் சொல்லுவது முழுவதும் பொய்," என்றான்.

உடனே நாராயணன், தான் அங்கே விளையாடப் போனதிலிருந்து அவர்களை விட்டு நீங்கி வந்தது வரையில் விளக்கமாக ஆசிரியரிடம் கூறினான்.

அப்போது மாணிக்கம், ஆசிரியரைப் பார்த்து, "ஐயா, நேற்று மாலை நானும், என் நண்பர்களாகிய கோவிந்

தன், கந்தன், முருகன் முதலியவர்களும் விளையாடுவதற்கு மாமரத்தின் கீழே சென்றோம். அப்போது, இந்த நாரா யணன் எங்களுக்கு முன்பே அங்கே வந்து மரத்தின்மேல் கல்லெறிந்து கொண்டு இருந்தான். இவன் எங்களைப் பார்த்து, 'நீங்கள் ஆசிரியரிடம் சொல் லாதீர்கள்; உங்களுக்கு மாம்பழம் தருகின்றேன்,' என்று சொல்லித் தன் மடியிலிருந்து மாம்பழங்களை எடுத்து ஆளுக்கு ஒன்று கொடுத்தான். அவ் வளவே; வேறு ஒன்றும் எனக்குத் தெரி யாது. வேண்டுமானால் கோவிந்தன், கந்தன் இவர்களைக் கேட்டுப் பாருங் கள்," என்றான்.

உடனே அவர்களும் மாணிக்கம் சொல்லுவது தான் உண்மையென்றும், நாராயணன் பொய் பேசுகின்றான் என்றும் கூறினார்கள்.

அப்போது நாராயணன், தான் சொல்வதே உண்மையென்றும் அவர் கள் அனைவரும் கூறுவது முற்றிலும் பொய் என்றும் இயம்பினான்.

இவைகளைக் கேட்டதும் ஆசிரியருக்கு இன்னது செய்வதென்று தோன்றாமல் இருந்தது. பிறகு அவர், நாராயணன் சொல்லுவதில் உண்மை இருக்கலாம் என்றும், ஆனாலும் இன்னும் நன்றாக ஆராய்வதே நலம் என்றும் தீர்மானித்து, நாராயணனை நோக்கி, "எது எப்படியிருந்தாலும் நீ ஒரு மாம் பழத்தை வீழ்த்தியதாக ஒத்துக் கொள்கின்றாய் அல்லவா?" என்றார்.

அதற்கு அவன், 'ஆம்; அது பிழையே,' என்றான்.

பிறகு ஆசிரியர் மாணிக்கத்தையும், அவனோடு சேர்ந்த மற்ற சிறுவர்களையும் நோக்கி "நாராயணன் உங்களுக்குக் கொடுத்ததாவேயிருந்தாலும் என்னிடம் தெரிவிக்காமல் அவைகளை நீங்கள் தின்றிருக்கக்கூடாது அல்லவா," என்றார்.

அப்போது மாணிக்கமும், அவனைச் சேர்ந்தவர்களும் ஒன்றும் பேசாமல் இருந்தார்கள்.


பிறகு அந்த ஆசிரியர் நாராயணனையும், மாணிக்கத்தையும், கந்தன்

முருகன் முதலியவர்களையும் பார்த்து "நீங்கள் யாவரும் அரைமணிநேரம் விசுப்பலகையின்மேல் ஏறி நிற்கவேண்டும்," என்று கூறினார். ஆனால், இது இவ்வளவோடு முடிந்து விட்டதாக அவர் எண்ணவில்லை.

ஆசிரியர் கட்டளையிட்டபடியே அவர்கள் யாவரும் அரைமணி நேரம் நின்றார்கள்.

4

பாடசாலை முடிந்ததும் சிறுவர்கள் வீட்டுக்குச் செல்ல வெளியே வந்தனர். மாணிக்கம், தன் நண்பர்களாகிய கோவிந்தன், கந்தன், முருகன் முதலியவர்களோடு முன்னதாக வந்து ஓர் இடத்தில் தங்கி ஏதோ பேசிக்கொண்டிருந்தான். அப்போது, நாராயணன் தனியே வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தான்.



மாணிக்கம்: அடே கோவிந்தா, அதோ போகிறுன் நாராயணன்! இன்

றைக்கு நாம் அவனை நன்ருக உதைக்க வேண்டும். சீக்கிரம் வாருங்கள். அவன் போய்விடுவான்.

கோவிந்தன் : மாணிக்கம், அவனை நாம் ஏன் அடிக்க வேண்டும்? நம்மோடு அவனுந்தானே நின்று கொண்டு இருந்தான்!

மாணிக்கம்: அவனை யார் நிற்கச் சொன்ஞர்கள்! ஆசிரியர் கேட்டபோது, 'நான்தான்,' என்று எழுந்ததனைல் அல்லவா அவன் அகப்பட்டுக் கொண்டான். அதனேடு நில்லாமல் அவன் நம்மையும் அல்லவா ஆசிரியரிடம் காட்டிக் கொடுத்து விட்டான். அவனுக்குச் சரியான பூசை கொடுத்தால்தான் அவன் இனிமேலாவது அவ்விதம் சொல்லாமல் இருப்பான். அடே கந்தா, நீ என்ன சொல்லுகிருய்?

கந்தன் : ஆம்; மாணிக்கம், நீ சொல்லுவது ஒரு வகையில் சரிதான். ஆனைல், நாம் இப்போது அவனை அடித்தோமானல் அதையும் அவன் ஆசிரியரிடம் சொல்லத்தானே போகிருன்.

மாணிக்கம் : சொல்லுவானா! சொன்னால் அவன் உயிரோடு பிறகு வீடு திரும்புவானா?

முருகன் : அடே, இது வீண்பேச்சு. நாம் அடித்தால் அவன் சும்மா இருந்துவிடுவானா! அவனுக்கு இருக்கின்ற வலிவு இங்கே யாருக்கும் இல்லையே! ஆனால், அவன் தன் வலிவைக் காட்டிக் கொள்வதில்லை. அவன் தன் வீட்டில் எவ்வளவு வேலைகள் செய்கின்றான் தெரியுமா! அன்று ஒரு நாள், நான் அவன் வீட்டுக்குப் போனேன். அப்போது அவன் தண்ணீர் நிரம்பியிருந்த ஒரு பெரிய தவலையை மிக இலேசாகத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு சென்றானே!



மாணிக்கம் : அடே முருகா, போதும் நிறுத்து. நீ பயங்கொள்ளி. அவன் வலிவு என்னிடம் என்ன செய்யும்? அடே, உங்களால் அந்தத் திருட்டு நாயா

யணன் ஓடிப்போய்விட்டான். ஆனாலும், அவனை நான் இவ்வளவோடு விடப் போகிறதில்லை.

இவர்கள் இவ்விதம் பேசிக் கொண்டு அவரவர் வீடுபோய்ச் சேர்ந் தார்கள். நாராயணன் உண்மையில் வலுவாளியே. சில பிள்ளைகள் நன்ருகப் படிப்பார்கள். ஆனால், அவர்கள் உடல் மிகவும் மெலிந் திருக்கும். சிலருக்கு உடற்கட்டு நன் ருக இருக்கும். ஆனால், அவர்கள் படிப்பில் சூனிய மாய் இருப்பார்கள். நாராயணனே அப் படிப்பட்டவன் அல் லன் அவன் கல்வி யிலும் குணத்திலும் சிறந்திருந்ததோடு உடல்வன்மையும் பெற்று இருந்தான். அவன் அதற்காக உடற் பயிற்சி கூடச் செய்ததில்லை. அவன் தன் வீட்டு வேலை களையெல்லாம் பெரும்பாலும் தானே செய்வான். அவன் தினந்தோறும்



வீட்டுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு கொடுப்பான்; சில சமயங்களில் அவன் தன் தாயாருக்கு உதவி-யாகப் பெரிய கட்டைகளையும் பிளந்து கொடுப்பான்; மற்றும் எந்த வேலை வேண்டுமானாலும் செய்வான்.

நாராயணன் மிகவும் வலுவாளி என்பது மாணிக்கத்துக்கு நன்றாகத் தெரியும். நேரில் நின்று நாராயண-னோடு சண்டை செய்ய அவனுக்கு மிகவும் அச்சம். அதனால்தான், அவன் தன் நண்பர்களை யெல்லாம் துணைக்கு அழைத்தான். அவர்கள் அவன் எண்ணத்திற்கு உடன்படாததால் மாணிக்கம் நாராயணன்மேல் எவ்வித மேனும் ஒரு பழியைச் சுமத்தி அவனைத் துன்புறுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டே சென்றான்.

கோவிந்தன், கந்தன், முருகன் முதலியவர்களுக்கு நாராயணன்மேல் அவ்வளவு கோபம் இல்லை. நாராயணன் உண்மையையே பேசுபவன் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அன்றியும் அவன் வலியச் சென்று அவர்கள்மீது கோள் சொல்லவில்லை. ஆசிரியர் அடுத்து அடுத்துப் பல கேள்விகள் கேட்டதின்பேரில் அவன் எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினன். அன்றியும் அவன், தன் பேரிலும் குற்றம் இருக்கிறது என்று ஆசிரியரிடம் ஒத்துக்கொண்டான். ஆதலால், "நாராயணன் மிகவும் நல்லவனே," என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

நாராயணன் வீட்டுக்குச் செல்லும் போது தான் செய்த பிழையைக் குறித்துப் பெரிதும் வருந்தினன். இனி ஆசிரியருக்குத் தன்மேல் நல்ல எண்ணம் உண்டாகும்படி தான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்த்தான். தன்னேடு மாணிக்கம், கந்தன், முருகன் முதலியோர்களும் வகுப்பில் அரைமணி நேரம் நிற்க நேர்ந்ததை நினைத்தும் அவன் வருந்தினன். இனி, அவர்கள் அவ்விதம் பிழை செய்யாமல் இருப்பதற்குத் தனக்குத் தெரிந்த நியாயங்களை அவர்

களுககு எடுத்துக் கூறுதல் தன் கடமை எனவும் அவன் எண்ணினான்.

ஆசிரியருக்கு நாராயணன்மேல் சிறிதும் கோபம் இல்லை. 'பிழை செய்தல் பிள்ளைகளுக்கு இயல்புதானே!' என்று அவர் எண்ணினார். நாராயணன் உண்மையைச் சொல்லி விட்டதால் அவர் அவனை மன்னித்தே இருக்கலாம். அவ்வாறு மன்னிப்பதும் சில சமயங்களில் தீமையாக முடிகின்றது. அன்றியும், மற்ற மாம்பழங்களை அடித்து வீழ்த்திய செய்தி அவருக்கு இன்னமும் நன்றாக விளங்கவில்லை. மாணிக்கத்தின் மீது உபாத்தியாயருக்குச் சந்தேகம் தோன்றினாலும் உண்மையை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் அவனைத் தண்டிக்க அவருக்கு விருப்பமில்லை. ஆதலால் இவர்களை இன்னமும் நன்றாக ஆராய வேண்டும் என எண்ணியே அவர் அவ்வாறு எல்லோருக்கும் இலேசாக அந்தத் தண்டனையைத் தந்தார்.

5

மறுநாள் பழக்கம்போல் யாவரும் பாடசாலைக்குச் சென்றார்கள். நாராயணன் என்றும் போலவே எல்லாச் சிறுவர்களிடமும் அன்பாக இருந்து வந்தான். இன்னும் சொல்ல வேண்டுமானால் அவன் அந்த நிகழ்ச்சியை மறந்து விட்டான் என்றுகூடச் சொல்லலாம். மாணிக்கத்துக்கோ நாராயணன் மீது வஞ்சம் குடிகொண்டு இருந்தது. ஆனால், அவன் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவே இல்லை. அவனுக்கு மற்ற நண்பர்களாகிய கோவிந்தன், கந்தன் முதலியவர்கள் மீதும் சிறிது கோபம் இருந்தது. அதையும் அவன் காட்டிக் கொள்ளவில்லை. ஆசிரியரோ மாணிக்கத்தின் மீதும் மற்றச் சிறுவர்களின் மீதும் கண்ணாகவே இருந்தார். அன்று மாணிக்கம் சொல்லியது உண்மையாக இருந்தாலும், பொய்யாக இருந்தாலும்

என்றைக்கேனும் உண்மை வெளிப் படும் என்பது அவர் எண்ணம். 'கெட்டிக் காரன் பொய் எட்டு நாளில் தெரிந்து விடும்,' என்பது பழமொழி அல்லவா!

இரண்டொரு நாட்கள் சென்றன. ஒரு நாள் நாராயணன் முன்னதாகப் பாடசாலேக்கு வந்து விட்டான். அப் போது, அங்கே ஒருவரும் இல்லாமை-யால் அவன் தனியே ஓர் இடத்தில் அமர்ந்து தன் பாடத்தைப் படித்துக்கொண்டு இருந்தான். உபாத்தியாயர் தம் அறையில் ஏதோ எழுதிக்கொண்டு இருந்தார். பிறகு அவர் திடீ-ரென்று ஓர் அவசர வேலையாக வெளியே சென்றார். அவர் அவ்விதம் செல்லும் போது, மாணிக்கம் அப்போது தான் பாடசாலேக்குள் நுழைந்தான்.




மாணிக்கம் பாடசாலேக்குள் வந்ததும் நாராயணன் தனிமையாக உட்

காத்திருப்பதைக் கண்டான். படிப்பில் கவனம் செலுத்தியிருந்ததால் மாணிக்கம் வந்ததையோ, ஆசிரியர் வெளியே சென்றதையேனும் நாரா யணன் கவனிக்கவேயில்லை.

மாணிக்கம் அங்கே வந்ததும் சிறிது நேரம் உலாவினான். அப்போது ஆசிரியர் இருக்கும் அறை திறந்து இருப்பதை அவன் கண்டான். ஆதலால் அவன் மெதுவாகப் போய் அங்கே எட்டிப் பார்த்தான். அவ்வறையில் ஒருவரும் இல்லை. ஆசிரியர் கைக் கடிகாரமும், பவுண்டன் பேனாவும் மேஜையின் மீது இருப்பதை அவன் கண்டான். அப்போது மாணிக்கத் திற்கு ஓர் எண்ணம் பிறந்தது. "இந்தப் பேனாவை எடுத்து நாராயணன் சட்டைப் பையில் எப்படியாவது போட்டுவிட்டால் அவனைத் திருடனாக்கலாம்," என்று அவன் எண்ணினான். ஆதலால், மாணிக்கம் மெதுவாக உள்ளே நுழைந்-தான். அப்போது, அவனுக்குக் கடி காரத்தின் மீதும் எண்ணம் சென்றது. செல்லவே அவன் அவ் விரண்டையும்

எடுத்துக்கொண்டு வெளியே சென்று ஒரு மறைவான இடத்தில் கடிகாரத்தை மண்ணில் புதைத்துவிட்டான். பிறகு அவன், அந்தப் பேனாவை மட்டும் கையில் மறைத்து வைத்துக் கொண்டு நாராயணன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். அப்போது, சில சிறுவர்களும் அங்கே வந்து படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருந்தார்கள்.



மாணிக்கம் தன் பக்கத்தில் வந்து உட்காரும் போது தான் நாராயணன் அவனைக் கவனித்தான். மாணிக்கம் நாராயணனோடு ஏதேதோ பேசிக்கொண்டே மெதுவாகத் தன் கையில் வைத்திருந்த பேனாவை அவன் சட்டைப்பையில் போட்டு விட்டான். நாராயணன் மாணிக்கத்தோடு பேசுவதும், பிறகு பாடத்தில் கருத்தைச் செலுத்துவதுமாக இருந்தான். மாணிக்கத்தின்

வஞ்சகச் செயலைச் சிறிதும் கவனிக்கவே யில்லை. பிறகு மாணிக்கம் தன் இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டுபாடத்தைப் படிப்பதுபோல் பாசாங்கு செய்தான்.

சிறிது நேரத்திற்குள் மற்றும் பல பிள்ளைகள் அங்கே வந்து சேர்ந்தார்கள். நாராயணன் அவர்களோடு பாட சம்பந்தமாக ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான். பாடம் துவங்கும் சமயம் வந்து விட்டது. அப்போது, அங்கே எல்லாப் பிள்ளைகளும் வந்து விட்டார்கள். வெளியே சென்றிருந்த ஆசிரியர் மிக்க அவசரமாகப் பாடசாலையில் நுழைந்தார். தம் அறையைப் பூட்டாது சென்றது அவருக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. அவர் உள்ளே நுழைந்ததும் கைக் கடிகாரமும், பேனாவும் அங்கே இல்லாததைக்கண்டு சிறிது நேரம் திகைத்து நின்றார்.



6

பாடசாலை மணி அடித்தது. ஆசிரியரும வகுப்பில் வந்து உட்கார்ந்தார். பேனுவும், கடிகாரமும் காணுமற் போனது அவருக்குப் பெரிதும் ஆச்சரியத்தையே விளைவித்தது. தாம் அறையைப் பூட்ட மறந்தது பிழையாக இருப்பினும் இத்தகைய திருடு நிகழுமென்று அவர் கனவிலும் எண்ணவில்லை. அன்றியும், "ஆசிரியர் அறையிலேயே திருடியவன் கைதேர்ந்த கள்ளனுக இருத்தல் வேண்டும்," என்றும் அவர் எண்ணினுர். "இத்தகைய துணிவான செய்கையைச் செய்தவன் யாவன்!" என்று அவர் நெடுநேரம் எண்ணிப் பார்த்தார். தாம் வெளியே சென்ற போது பாடசாலையில் இருந்தவன் யாவன் என்று அவர் நினைத்துப் பார்த்தர். அப்போது அங்கே இருந்தவன் நாராயணன் ஒருவனே என்பது அவர் நினைவிற்கு வந்தது. "ஆ—அவனு

இத்தகைய திருட்டுச் செயலைச் செய் திருப்பான்!'' என நெடுநேரம் எண்ணி ஞர்; பிறகு அவனை உற்று நோக்கினர். அப்போது, அவன் முகம் மாசு மறு வின்றி விளங்கியது. ஆதலால், அவருக் குத் தோன்றிய சிறு சந்தேகமும் உடனே நீங்கியது.

பின்னர், அவர் மறுபடியும சிந்தனை யில் ஆழ்ந்தார். வெறியில் மாணிக்கம் வந்துகொண் டிருந்தது அவர் நினை விற்கு வந்தது. ஆதலால், அவர் உடனே அவன் முகத்தை உற்றுப் பார்த்தார். அப்போது அவன் தலை குனிந்து கொண்டு, ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு ஆசிரியரைப் பார்ப் பதும், படிப்பது போல் நடிப்பதுமாக இருந்தான். மாணிக்கத்தின் பார்வை யில் அவருக்கு ஐயம் தோன்றியது. ஆனலும், அவர் அதனை அப்போது தெரிவிக்கவில்லை.

அவ்வாசிரியர் எப்போதும் சிரித்த முகமாக இருப்பவர். அவர் சாதாரணமாக வகுப்பிற்கு வந்ததும் பாடத்தைத்

துவங்கிவிடுவார்; அல்லது பாடசம்பந்தமாகச் சில செய்திகளை முன்னதாகச் சொல்லுவார். அவ்விதம் இன்றி அன்று அவர் பேசாமல் இருந்தது அங்குள்ள பிள்ளைகள் அனைவர்க்கும் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மாணிக்கத்துக்கோ, அதன் காரணம் தெரியுமாதலால் சிறிது அச்சமே குடி கொண்டிருந்தது.

பிறகு அவ்வாசிரியர் சிறுவர்களை நோக்கி, "பிள்ளைகளே, இங்கே ஒரு கள்ளன் இருக்கின்றான். அவன் உண்மையைச் சொல்லிவிட்டால் பிழைப்பான் அல்லையேல், பிறகு அவனுக்கு இன்ன தண்டனை கிடைக்கும் என்பதை நான் இப்போது சொல்லமாட்டேன்," என்றார்.

ஆசிரியர் இவ்வாறு சொல்லிய போது அந்த வகுப்பு சிறிதும் சந்தடியின்றி யிருந்தது. மாணிக்கம் நீங்கலாக அங்கே இருந்த எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். மாணிக்கம் ஆசிரியரைப் பார்த்தான்; அவர், தன்னைப் பார்ப்பதைத் தெரிந்து கொண்டும் ஒன்றும் அறியாதவனைப்போல்

தலைகுனிந்து புத்தகத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.

அந்த ஆசிரியர் மறுபடியும் பிள்ளைகளைப் பார்த்து, "மாணவர்களே, நான் இப்போது அதை உங்களுக்கு விளக்கமாகக் கூறுகின்றேன்; நான் சிறிது நேரத்திற்கு முன்பு என் அறையில் கைக் கடிகாரமும், பவுன்டன் பேனுவும் வைத்துவிட்டு வெளியே சென்றேன்; திரும்பி வருவதற்குள் அவை மாயமாய்ப் போய்விட்டன. அவைகளை எடுத்தவன் இப்போது கொடுத்துவிட்டால் நல்லது; அதை எடுத்தவன் 'நான்தான்' என்று சொல்லிவிட்டாலும் நலமே. அவனை நான் அதிகமாகத் தண்டிக்கமாட்டேன். அல்லையேல் அவன் இந்தப் பாடசாலையை விட்டு நீங்குவதோடு போலீசாரிடமும் ஒப்புவிக்கப்படுவான்," என்ருர்.

இவ்வாறு ஆசிரியர் சொல்லும் போது நாராயணன் ஆச்சரியமும், வருத்தமும் கலந்த முகத்தோடு அந்த ஆசிரியரையே பார்த்துக்கொண்டு இருந்தான். மற்றச் சிறுவர்களும்

ஒன்றும் தோன்ருமல் திகைத்திருந் தனர். மாணிக்கமோ நாராயணனை ஒரு முறைபார்த்தான்; பிறகு ஆசிரியரைப் பார்த்தான்; முடிவில் தலை குனிந்து கொண்டான். திருட்டுவிழி அவனுக்கு வர-வர அதிகப்பட்டுக் கொண்டே வந் தது. அன்றியும் ஆசிரியர், "போலீஸ்" என்னும் வார்த்தையைச் சொன்ன போது அவன் உள்ளம் திடுக்கிட்டது. ஆதலால், அந்த ஆசிரியருக்கு மாணிக்கத்தின் மீதே சந்தேகம் அதி கரித்தது.

அவர் அவ்வளவு கூறியும், எடுத்த-வன் அவைகளைக் கொண்டுவந்து கொடுக்கவோ, அல்லது 'நான்தான் எடுத்தேன்,' என்று சொல்லவோ முன் வரவில்லை. ஆதலால் அவர் சிறிது நேரம் ஏதோ எண்ணத்தில் அமர்ந் திருந்தார். அவருக்கு மாணிக்கத்தின் மீது சந்தேகம் மிகுதியாக இருந்தாலும் யாதொரு காரணமும் இல்லாமல் அவனைத் திருடன் என்று எவ்வாறு சொல்லுவது என அவர் எண்ணிஞர். ஏனெனில் சிலர் அச்சத்திஞலோ, வேறு

[illegible] ளைப்போல்

[illegible] அல்லவா?

[illegible] ஆகியும் [illegible] ண்மை [illegible] ஆதலால் அவர், "[illegible] எல்- [illegible] கின்- [illegible] த்தை [illegible].

[illegible] மாணிக்கத்தின் [illegible] கொண்- [illegible] பிள்ளைகள் எல்- [illegible] [illegible] தங்கள் தங்கள் [illegible] மாணிக்கம் [illegible] தன் [illegible] இல்லை [illegible] அடுத்த [illegible] அவன் தன் [illegible].

மாணிக்கம் அவ்வளவு ஆடம்பரங்கள் செய்தும் அந்த ஆசிரியர் அவனையே நன்றாகச் சோதனை போட வேண்டும் என்று எண்ணினார். ஆனாலும் அவனை மட்டும் அழைத்துச் சோதனை போடுதல் நியாயம் அன்று என்று அவர் அங்குள்ள எல்லோரையும் முதலில் இருந்து வரிசையாகச் சோதனை போட்டுக்கொண்டே வந்தார்.

அவர் அவ்விதம் இரண்டொரு சிறுவனைக்கூட நன்றாகச் சோதனை போடவில்லை. அப்போது நாராயணனும் மற்றச் சிறுவர்களைப்போல் தன் சட்டைப்பையைப் பார்த்தான். அவன் அவ்வாறு பார்க்கும்போது தன் சட்டைப் பையில் ஏதோ ஒன்று நீளமாய் இருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. ஆதலால், அவன் உடனே அதைக் கையில் எடுத்தான்.

ஆ! அவன் அப்போது அடைந்த அச்சத்திற்கு ஓர் அளவே இல்லை. அவன் கைகளும் கால்களும் நடுக்க மடைந்தன. பேசுதற்கு நாவும் எழவில்லை; தேளைப் பாம்பைக் கண்டவன்கூட அவ்வளவு

நடுங்கி இருக்கமாட்டான். அவன், உடல் நடுங்க, வாய் குழற, மருண்ட கண்களில் நீர் வடிய, "ஐயா,—என்—சட்டைப் பையில்—யாரோ—இதைப்—போட்டு—விட்டார்கள்," என்று தத்தித் தத்தித் கூறினான். உடனே மாணிக்கம், "இதோ திருடன்-திருடன்," என்று கூவினான்.



ஆனால் ஆசிரியரோ ஒன்றும் தோன்றா-மல் அசைவற்று நின்றார்.

நாராயணன் வைத்திருந்த பேனா தம்முடையதே என்பதை அறிந்த ஆசிரியருக்கு அளவுகடந்த ஆச்சரியமே

உண்டாயிற்று. அவர் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்துப் பிறகு நாராயணனை நோக்கிப் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"நாராயணா, இந்தப் பேனா உனக்கு எப்படிக் கிடைத்தது?"

"ஐயா, எனக்கு ஒன்றும் தெரியாது. யாரோ இதை என் சட்டைப்பையில் போட்டு இருக்கவேண்டும். இது உண்மை; முற்றிலும் உண்மை."

"ஆனால் எவன் அவ்விதம் போட்டு இருப்பான்?"

"அது எனக்குத் தெரியாது."

"எப்போது போட்டிருப்பான்?"

"அதுவும் எனக்குத் தெரியாது ஐயா!"

"இந்தப் பேனா எவ்வளவு நேரமாக உன் சட்டைப்பையில் இருக்கிறது?"

"நான் இதுவரையில் இதைக் கவனிக்கவேயில்லை; இப்போதுதான் பார்த்தேன். ஆதலால், இதைக் குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது."

"நீ பள்ளிக்கூடத்துக்கு வந்த போதாவது, மணி யடிப்பதற்கு முன்-பாவது உன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தாயா?"

"நான் அவ்விதம் பார்த்ததாக எனக்கு நினைவே யில்லை. பார்க்கவில்லை என்றே சொல்லலாம்."

"அது போகட்டும்; உனக்கு யார்-மீதேனும் சந்தேகம் தோன்றுகிறதா?"

அப்போது மாணிக்கத்தின் மனம் திடுக்கிட்டது. அவன் எங்கே தன்னைச் சொல்லிவிடுகின்றானோ என்று நாராய-ணனையே பார்த்துக்கொண்டிருந்தான்.

நாராயணன் சிறிது நேரம் விழித்துப் பிறகு, "ஐயா எனக்கு ஒருவர் மீதும் சந்தேகம் இல்லை. நான் ஒருவர் மேல் எப்படி வீணாகச் சந்தேகிப்பது?" என்றான்.

அப்போது ஆசிரியர், 'அது போ-கட்டும்; உன் சட்டைப்பையை இன்னும் நன்றாகத் தடவிப்பார். என் கைக்கடி-காரமும் அகப்படுகின்றதா பார்ப்போம்,' என்றார்.

நாராயணனுக்கு மறுபடியும் மனத்தில் திகில் உண்டாயிற்று. ஆதலால், அவன் பயந்துகொண்டே தன் சட்டைப் பையை நன்றாகத் தடவினான். பிறகு, அவன் தன் துணியையும் உதறிப் பார்த்தான். கடிகாரம் அகப்படவே யில்லை.

ஆதலால், அவர் அவனை அவ்வளவோடு நிறுத்திவிட்டு, அவனுக்கு அடுத்திருந்த சிறுவனைப் பல கேள்விகள் கேட்டுப் பார்த்தார். அவன் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டான். அச் சிறுவனும் நல்லவன். ஆதலால், அவர் அவனுக்கு அடுத்திருந்த பிள்ளைகளை வரிசையாகக் கேட்டுக் கொண்டே மாணிக்கத்தின் அருகே வந்தார். மாணிக்கம் அவர் அங்கே வருவதற்கு முன்பே மிக்க தைரியசாலிபோல் தயாராக எழுந்து நின்றான். ஆனால், மனத்தில் அச்சம் மிகுதியும் இருந்தது. ஆசிரியர் அவனைப் பல கேள்விகள் கேட்டார். எல்லாக் கேள்விகளுக்கும் அவன் தனக்கு ஒன்றும் தெரியாது என்று மிக உரத்துக் கூறினான். அவன் செய்த

ஆர்வாரம் ஆசிரியருக்கு மேலும் மேலும் சந்தேகத்தையே விளைவித்தது. ஆனாலும் தக்க காரணமில்லாமல் அவன் மீது எவ்வாறு பழி சுமத்துவது என்று அவர் அஞ்சினார்.

இவ்வாறு நெடுநேரம் பலரையும் விசாரித்த பிறகு அவர் மறுபடியும் நாராயணனிடமே வந்தார்.

"நாராயணா, நான் வெளியே போனபோதுஉன்னோடு யார்யார் இருந்தனர்?"

"ஐயா, நான் தாங்கள் வெளியே போனதைக் கவனிக்கவே யில்லை."

"என் அறையில் யாரேனும் நுழைந்ததாக உனக்குச் சத்தம் கேட்டதா?"

நாராயணன் சிறிது யோசித்து, "ஐயா, அவ்வாறு சத்தம் கேட்டதாகவும் எனக்கு நினைவில்லை, என்றான்."

பிறகு ஆசிரியர் ஏதோ சிறிது யோசித்தார். உடனே, அவர் நாராயணனைத் தம் அறைக்கு அழைத்துச்சென்றார். 'உபாத்தியாயர் நாராயணனைத் தண்டிக்கவே அழைத்துச்

செல்லுகின்றார்,' என்று பிள்ளைகள் எல்லோரும் நினைத்தார்கள். நாராயண னும் அவ்வாறே எண்ணினான். ஆனால், அவன் தண்டனைக்கு அஞ்சவில்லை; தன் மீது அநியாயமாகப் பழிநேர்வதைக் கருதியே வருந்தினான்.

நாராயணனை உள்ளே அழைத்துச் சென்றதும், அந்த ஆசிரியர் மற்றும் ஒரு முறை அவன் முகத்தை உற்று நோக்கினார். அவன் அப்போதும் கள்ளம் கபடம் முதலியன அற்றவ னாகவே விளங்கினான்.

பிறகு அவர், "நாராயணா, நான் உன்னைச் சில கேள்விகள் கேட்பதற் காகவே இங்கே அழைத்து வந்தேன்; உனக்கு மாணிக்கத்தின் மீது சந்தேகம் தோன்றுகின்றதா?" என்றார்.

நாராயணன் சிறிது நேரம் சிந்தனை செய்து பிறகு "ஐயா, எனக்குத் தோன்ற வில்லை; ஆனால் அவனும் என்னுடன் இன்று சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தான்", என்றான்.

"அப்படியா — மணியடிப் பதற்கு முன்பா?"

"ஆம்."

"அப்போது அவனையன்றி இன்னும் யார் யார் அங்கே இருந்தனர்?"

"பல பிள்ளைகள் இருந்தார்கள். அப்போது நான் படித்துக் கொண்டு இருந்ததால் அவர்கள் இன்னின்னர் என என்னால் இப்போது சொல்ல முடியாது."

"நல்லது; நீ உன் இடத்திற்குப் போ", என்று அவர் அவனை அனுப்பி விட்டு அவ்வறையை மற்றும் ஒரு முறை நன்றாகச் சோதித்துப் பார்த்தார். கைக் கடிகாரம் எங்கும் அகப்படவில்லை. பின்னர், அவர் அப்பாடசாலையில் நாற் புறமும் சென்று தேடினார். கடிகாரம் அகப்படவே யில்லை.

சிறிது நேரத்திற்குள் ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து பிள்ளைகட்குப் பாடம் கற்பிக்கத் தொடங்கினார். அவர் பிறகு கடிகாரத்தைக் குறித்தோ, நாரா-யணனிடம் அகப் பட்ட பேனாவைக்

குறித்தோ ஒன்றும் பேசாமல் பாடம் சொல்லித் தருவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது பிள்ளைகள் எல்லோருக்கும் மிகவும் ஆச்சரியமாகவே இருந்தது.



7

பாடசாலை முடிந்தது. பிள்ளைகள் எல்லோரும் பழக்கம் போல் வீடு செல்லப் புறப்பட்டனர். அவர்களில் பலர் நாராயணன் மீதே சந்தேகப்பட்டனர். சிலர் ஒன்றும் தோன்ருமல் விழித்தனர். தன் சட்டைப் பையில் பேஞ எவ்விதம் வந்தது என்பதை அறிய நாராயணனும் மிகவும் ஆவல் கொண்டான். உபாத்தியாயர் கேட்ட கேள்விகளிலிருந்து அவனுக்கு மாணிக்கத்தின் மீது சிறிது சந்தேகம் ஏற்பட்டது. ஆதலால், அவன் அப்பொழுதிலிருந்தே மாணிக்கத்தின் செயல்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

கந்தன், முருகன், கோவிந்தன் இவர்களுக்கு நாராயணன்மீது சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனல், அவன் சட்டைப் பையில் அப்பேஞ எவ்விதம் வந்திருக்கும் என்றே அவர்கள் ஆச்சரியப்பட்டனர். அப்போது அவர்களுக்-

கும் மாணிக்கத்தின்மீது சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

களவுபோன நிகழ்ச்சியை ஆசிரியர் அவ்வளவோடு விட்டுவிட்டார் என்றே மாணிக்கம் எண்ணினுன். அன்றியும் ஆசிரியர், நாராயணன் மீதே சந்தேகம் கொண்டிருக்கிருர் எனவும் அவன் எண்ணினுன். ஆதலால், அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகி விட்டது. அவன் கந்தன், கோவிந்தன் முதலியவர்களைக் கண்டு, "அடே, நாராயணனை நாம் மிகவும் யோக்கியன் - யோக்கியன் என்று எண்ணியிருந்தோமே! அவன் செய்த திருட்டுச் செயலைப் பார்த்தீர்களா?" என்ருன்.


அப்போது அவர்கள், அவனுக்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆதலால் மாணிக்கம், தன் பேச்சை உடனே மாற்றிக் கொண்டான். ஏனென்ருல் தான் செய்த திருட்டுத் தொழில் ஒருகால் அவர்களுக்குத் தெரிந்துவிட்டதோ என அவன் சந்தேகம் கொண்டான்.

பிள்ளைகள் சென்ற பிறகும் அந்த ஆசிரியர் பாடசாலையை விட்டு நீங்க-

வில்லை. அவர், களவுபோன நிகழ்ச்சி-யைக்குறித்து ஏதேதோ நெடுநேரம் எண்ணிப் பார்த்தார். கைக்கடிகாரத்தை எடுத்தவன் என்ன செய்திருப்பான் என அவர் நினைத்துப்பார்த்தார்; மற்று-மோர்முறை அந்தப் பாடசாலை முழு-வதும் தேடினுர். பிறகு அவர் பாடசாலை-யைச் சுற்றியுள்ள இடத்தையும் ஒரு முறை சுற்றி வந்தார். கடிகாரம் களவு போனதைக் குறித்துக்கூட அவர் அவ்-வளவு வருந்தவில்லை. அதைக் களவு செய்தவன் இன்னுன் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே அவரது நோக்கம். ஆதலால், அன்று இரவு மணி ஏழாகியும் அவர் பாட-சாலையை விட்டுப் போகாமலே இருந்து விட்டார்.

ஏறக்குறைய எட்டடிக்கும் சமயம். அன்று நிலவு பால்போல் நன்ருகக் காய்ந்து கொண்டிருந்தும் பாடசாலை மட்டில் இருட்டாகவே இருந்தது. ஆசி-ரியர் அன்று அதுவரையில், 'விளக்கு ஏற்றவேண்டுமே,' என்பதையும் மறந்து இருந்தார். அப்போது பாடசாலையின்

பின்புறத்தில் யாரோ செல்லுவதுபோல் அவருக்குத் தோன்றிற்று. ஆதலால், அவர் தம் இடத்திலிருந்து மெதுவாக எழுந்து அவ்வறையின் பலகணி அருகே



வந்து பார்த்தார். அப்போது ஒரு சிறு-வன் பாடசாலையின் பின்புறத்திலே உள்ள ஓர் இடத்திலே உட்கார்ந்து அங்குள்ள மண்ணைத் தோண்டி ஏதோ ஒன்றை எடுப்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. உடனே அவர் திடீ-ரென்று அங்கே சென்று அச்சிறுவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவேண்டு

மென எண்ணினர். அதற்குள் அச்சிறு-
வன் அப்பொருளை எடுத்துக் கொண்டு
எழுந்து நின்றான். அப்போது அங்கே
வந்தவன் மாணிக்கமே என்பதையும்,
அவன் தோண்டி எடுத்த பொருள் தன்
கைக்கடிகாரமே என்பதையும் அவர்
நன்றாக உணர்ந்தார்.

ஆசிரியர் பாடசாலையிலே இருப்-
பது மாணிக்கத்துக்குத் தெரியாது. ஆத-
லால், அவன் சிறிதும் அச்சமின்றி
அங்கே வந்து கடிகாரத்தை எடுத்துப்
போக எண்ணினன். அவன் கடி-
காரத்தை எடுத்துக் கொண்டு எழுந்து
நின்று பலகணியின் பக்கமாகத் திரும்-
பினன். ஆசிரியர் அங்கே நின்றிருப்-
பதை அறிந்ததும் அவன் முதலில்
மிகவும் பயந்து அசைவற்று நின்றான்.
பிறகு, அவன் கடிகாரத்துடன் அவ்-
விடத்தை விட்டு ஓடிப்போய்விட ஆரம்
பித்தான். ஆனல், அவன் அவ்வாறு
இரண்டோர் அடி வைத்து ஓடுவதற்குள்
யாரோ ஒருவன் வேகமாக வந்து தன்னை
மிக வலுவாகப் பிடித்துக் கொண்டதை
உணர்ந்து ஒன்றும் செய்ய இயலாமல்

இருந்தான். அப்போது, ஆசிரியர் அவ்வாறு பிடித்தவன் இன்னான் என்பதை அறிய அப்பாடசாலையை விட்டு வெளியே வந்தார். அவன் நாராயணன்



என்பதை அறிந்ததும் அவர் மிகுதியும் ஆச்சரியப்பட்டார்.

ஆசிரியர் : நாராயணா, நீ எப்படி இங்கே வந்தாய்?

நாராயணன் : ஐயா, தாங்கள் மாணிக்கத்தின் மீது சந்தேகப்பட்டதிலிருந்து எனக்கும் சந்தேகம் ஏற்பட்டது. ஆதலால், நான் இவனுக்குத் தெரியா-

மல் இன்று மாலையில் இருந்து இது வரையில் இவன் செல்லும் இடங்களுக் கெல்லாம் இவனைப் பின் தொடர்ந்தே சென்றுகொண்டிருந்தேன். இவன் பாட சாலைக்குள் நுழைந்தபோது நானும் பின்தொடர்ந்தேன். தாங்களும் இங்கே இருக்க நேர்ந்தது எனக்கு மிகுதியும் அனுகூலமாக இருந்தது.

பிறகு மாணிக்கம் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தான் திருட நேர்ந்த காரணத்தையும், நாராயணன், சட்டைப் பையில் பேனாவைப் போட்ட விதத்தை-யும் மற்றும் பிற செய்திகளையும் விளக்-கமாகக் கூறித் தன்னைப் போலீசாரிடம் ஒப்புவிக்காமல் இருக்கும்படி மிகவும் வேண்டிக்கொண்டான்.

அந்த ஆசிரியர் மாணிக்கத்தை அவன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அவன் பெற்றோரிடம் நடந்த-வைகளை யெல்லாம் விளக்கமாகக் கூறினார். பிறகு, நாராயணன் மாணிக்-கத்தை மறைவாக அழைத்துக்கொண்டு போய் அவனுக்குப் பல நன்மதிகளைக் கூறி அந்த ஆசிரியர் காலில் விழுந்து

மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படியும் செய்தான்.

மறுநாள் பிள்ளைகள் யாவரும் பாடசாலைக்கு வந்தனர். மாணிக்கம் கடிகாரம் திருடிய செய்தி அங்குள்ளவருள் ஒருவருக்கும் தெரியாது. ஆதலால், அவர்களில் அநேகர் நாராயணனின்மீதே சந்தேகம் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் நாராயணன் வந்தான். அவனைப் பார்த்ததும் ஒருவருக்கொருவர் இரகசியமாக ஏதேதோ பேசிக்கொண்டனர். சிலர் அவனைச் சுட்டிக்காட்டியும் பேசலாயினர். நாராயணன் அதனைக் குறிப்பில் உணர்ந்து கொண்டான். ஆயினும் அவன் முன்னாள் இரவு நடந்த நிகழ்ச்சியை அங்குள்ள ஒருவருக்கும் சொல்லவேயில்லை. பிறருக்கு அவமானம் உண்டாகக் கூடிய செய்திகளை எவருடனும் சொல்லுதல் கூடாது என்பது, அவன் எண்ணம்.

பிறகு மணி யடித்தது; மாணிக்கம் அப்போதும் வரவே யில்லை. ஆசிரியர், தம் அறையிலிருந்து வகுப்பிற்கு வந்து

உட்கார்ந்தார். அப்போது அவரது மேற் சட்டைப்பையில் கடிகாரம் இருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். 'நாராயணன்தான் அதைத் திருடி வைத்திருந்து பிறகு கொடுத்திருக்க வேண்டும்,' என்று சிலர் எண்ணினார்கள். சிலர், 'அது அவ்வறையிலேயே அகப்பட்டிருக்க வேண்டும்,' என எண்ணினர். அவ்விதம் அவர்கள் பலப்பல விதமாகப் பேசிக்கொள்ளலாயினர்.

ஆசிரியர் வகுப்பிற்கு வந்ததும் நாராயணனைப் பார்த்துப் புன்னகை செய்தார். அப்போது நாராயணன் சிறிது சிரித்துப் பின்னர் நாணத்தால் தலைகுனிந்தான். அப்போது பிள்ளைகள் ஒன்றும் தெரியாமல் விழித்தனர்.

பிறகு அவர், "மாணிக்கம் எங்கே?" என்று நாராயணனைக் கேட்டார்.

"அவன் இங்கே வருவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு வீட்டிலேயே இருக்கலாம்," என்று நாராயணன் உரைத்தான்.

உடனே அவர் நாராயணனைப் பார்த்து, "நீ அவனுக்குத் தக்க நன்மதி கூறி அவனை இங்கே அழைத்துவா," என்றார்.

நாராயணனும் உடனே பாடசாலை-யை விட்டு விரைந்து சென்றான். அப்போது அவர், தம் கடிகாரம் அகப்பட்ட விதத்தையும், நாராயணன் சட்டைப்-பையில் பேனா இருந்த வரலாற்றையும் அப்பிள்ளைகளுக்கு விளக்கமாகக் கூறி மாணிக்கம் வந்தால் அவனை ஒருவரும் ஏளனம் செய்தல் கூடாது என்றும் கட்டளையிட்டார். பிறகு அவர், மாம்பழத்-தின் வரலாற்றை அறிவதற்குக் கோவிந்தனைக் கேட்டார். அப்போது அவன், நாராயணன் சொல்லிய யாவும் உண்மை என்றும், தான் அன்று பொய் பேசியதை மன்னிக்க வேண்டும் என்றும் வருத்தத்துடன் கூறினான். அப்போதே கந்தன், முருகன் முதலியவர்களும் அந்த ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.


நாராயணனின் சிறந்த குணங்களை அந்த ஆசிரியர் சொல்லக் கேட்ட பிள்ளைகள் யாவரும் மிகவும் ஆச்சரிய

மடைந்தார்கள். அவனைப்போல் தாங்களும் இனி எப்போதும் உண்மை பேசி நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்று பிள்ளைகள் ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மாணிக்கமும் நாராயணனும் அங்கே வந்து சேர்ந்தார்கள். நாராயணன் மாணிக்கத்துக்கு வழிமுழுவதும் மிக அன்பாகவும், அருமையாகவும் பலப்பல நன்மொழிகளைக் கூறிக்கொண்டே வந்தான். அப்போது மாணிக்கம், "ஆம் இத்தகைய அருமை நண்பனை நான் இதுவரையில் தெரிந்து கொள்ளாமல் இருந்தேனே!" என எண்ணி வருந்தினான். பின்னர், அவன் அதுவரையில் செய்த, பல பிழைகளுக்கும் நாராயணனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

மாணிக்கம் பாடசாலைக்கு வந்ததும் ஆசிரியரையும், தன் நண்பர்களையும் பார்ப்பதற்கும் எண்ணம் இல்லாமல் தலை குனிந்து சிறிதுநேரம் மௌனமாய் நின்றான். பிறகு அவன், தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். ஆசிரியர் அப்போது

அவனுக்குப் பல நன்மொழிகள் கூறி அவனைத் தேற்றினார்.



பல சிறந்த பெரியோர்களது சரித்திரங்களே அன்று முழுதும் அப்பிள்ளைகளுக்குப் பாடமாக இருந்தன. உலகம் போற்றும் உத்தமரான காந்தி அடிகளின் இளம்பருவ வரலாற்றினையும், அரிச்சந்திரன் எத்தகைய துன்பத்திலும் பொய் பேசாமல் இருந்த செய்தியினையும் அப்போது அவர் சிறப்பாக அவர்களுக்குக் கூறினார். எல்லோரும் சில சமயங்களில் தவறி நடக்கக் கூடும்

என்றும், அவ்விதம் ஒருமுறை தவறு நேர்ந்தால் பிறகு அக்குற்றம் என்றும் நேராதபடி பார்த்துக்கொள்வதே சிறந்த பிள்ளைகளுக்கு அழகு என்றும் அந்த ஆசிரியர் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

அன்றுமுதல் பிள்ளைகள் யாவரும் நாராயணனைச் 'சத்திய நாராயணன்' என்றே அழைக்க ஆரம்பித்தனர். நாராயணன், மாணிக்கம், கோவிந்தன், கந்தன், முருகன் முதலியோர் முன்பு போலவே பிரியாத தோழர்களாய் இருந்ததோடு நாராயணன் சொற்படியே நடந்து நல்ல பெயரும் எடுத்தார்கள்.

அந்தச் சிறுவர்களால் அப்பாடசாலைக்கும் நல்ல பெயர் உண்டாயிற்று. நாராயணன் தாய் தந்தையர் அப்போது எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா! அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக அவர்கள் அப்போது மகிழ்ச்சியுற்றனர்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"
—குறள்.